


காந்தி ஜெயந்தியை முன்னிட்டு புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியம் வாழைக்குறிச்சி ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி கிராம மக்களின் கோரிக்கை கேட்டறிந்து உடனே நடவடிக்கை மேற்கொண்டார். உடன் ஒன்றியச் செயலாளர்கள் அ.அடைக்கலமணி, அ.முத்து, பொன்னமராவதி பேரூர்ச் செயலாளர் அ.அழகப்பன் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், அனைத்துத் துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை சுற்றுலா வளாக கூட்டரங்கில், 1.10.2024 அன்று சுற்றுலாத்துறை மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர்.பி.சந்தரமோகன், சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சி.சமயமூர்த்தி. சுற்றுலாத்துறை மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க. பொறியாளர் அணி

# மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் கழக பொறுப்புகளுக்கு விண்ணப்பிக்கலாம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எ.வ.வேலு அறிக்கை!



திருவண்ணாமலை, அக். 4-

திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட திமுக பொறியாளர் அணி மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் கழக அமைப்பாளர், துணை அமைப்பாளர் பொறுப்புகளுக்கு விண்ணப்பிக்கலாம் என்று பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அறிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினரும், பொதுப்பணித்துறை அமைச்சருமான எ.வ. வேலு விடுத்துள்ள அறிக்கையில்

தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்டக் கழக பொறியாளர் அணிக்கு மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் கழக அமைப்பாளர், துணை அமைப்பாளகளின் பொறுப்புக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விருப்பமுள்ள கழக தொழர்கள் கீழ்க் கண்ட வழிமுறைகளின்படி விண்ணப்பிக்க வேண்டும்.

1. விண்ணப்பிப்பவர்கள் பொறியியல் பட்டப்படிப்பு / பட்டைய படிப்பு நிறைவு செய்தவராக இருக்க வேண்டும்.

2. விண்ணப்பிப்பவர்கள் அந்தந்த பகுதியில் வாக்காளராக இருத்தல் அவசியம்.

3. ஒரு அமைப்பாளர், ஐந்து துணை அமைப்பாளர்கள் எனும் அளவுக்கு மிகாமல் பொறுப்புகள் நியமிக்க பட உள்ளது.

4. பெண் பொறியியல் பட்டதாரிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

5. விண்ணப்பத்தில் இணைக்கப்பட்டுள்ள QR CODE வழியே பொறியாளர் அணியின் போர்ட்டல் வழியே மட்டும் விண்ணப்பிக்க வேண்டும்.

6. விண்ணப்பித்த விண்ணப்பதாரர்களை நேரில் அழைத்து நேர்முக தேர்வு நடத்தப்படும்.

எனவே திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்டக் கழக மாநகர, ஒன்றிய, நகர, பேரூர்க் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள் மற்றும் பொறியாளர் அணி நிர்வாகிகள் மேற்கண்ட விதி முறைகளின் படி விண்ணப்பங்களை இணைப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

### உதயநிதி ஸ்டாலின் துணை முதல்வராகப் பொறுப்பேற்பு!

# கோவை ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் இனிப்பு, பட்டாசு வெடித்து கொண்டாட்டம்!

## எஸ்.அன்புச்செழியன் தலைமையில் பி.ஆர்.அருள்மொழி – மருது பாண்டியன் பங்கேற்பு!

கோவை, அக். 4 -

கோவை ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தின் முன்புறம் தி.மு.க. மாநகர் மாவட்ட வழக்கறிஞர் அணி சார்பில் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துணை முதல்வராக பொறுப்பேற்றதை கொண்டாடும் விதமாக கோவை மாநகர மாவட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் எஸ்.அன்புச்செழியன் தலைமையில்,

தி.மு.க. மாநில சட்டத்துறை இணை செயலாளர்கள் பி.ஆர்.அருள்மொழி முன்னிலையில் பொதுமக்களுக்கும், வழக்கறிஞர்களுக்கும் இனிப்புகள் வழங்கி, பட்டாசு வெடித்து சிறப்புடன் கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வில் கோவை மாநகர் மாவட்ட வழக்கறிஞரணி மாவட்ட தலைவர் மருது பாண்டியன், துணைத் தலைவர் மணிவேல், கோவை வழக்கறிஞர்கள் அணி துணை அமைப்பாளர்கள் விக்ரம், சலாவுதீன், ஆசைத்தம்பி, வெற்றி, கோகிலவாணி மற்றும் மூத்த வழக்கறிஞர்கள் முன்னாள் அமைப்பாளர் ஜி.டி. ராஜேந்திரன், கனகராஜ், எஸ்.ரவிச்சந்திரன், ராஜப்பன், எஸ்.சந்திரமோகன், முனீர், ஆருஸ், கர்ணன், ராஜப்பன், டி.ரவிச்சந்திரன் வழக்கறிஞர்கள் ராஜமாணிக்கம், நிஜலிங்கப்பா, விஜயகுமார், சி.என்.சந்திரன், முத்துக்குமார், கிருஷ்ணமூர்த்தி, கண்ணன், மோகன், அருண்குமார், முருகானந்தம், விஜயானந்த், சக்ரவர்த்தி, மனோகரன், பிரபாகரன், சுரேஷ், முத்துகிருஷ்ணன், சுப்பிரமணியம், தாமோதரன், ஹேமந்த், லிங்கராஜா, அன்வர்தீன், பாண்டக்குமார், சலீம், நூருல், மணிமேகலை, மகேஸ்வரி, திவ்யபாரதி, சத்யா, ஜீவா உட்பட்ட முன்னூற்றுக்கும் மேற்பட்ட கழக வழக்கறிஞர்கள் கலந்து கொண்டனர்.

---

### ரூ.1.65 கோடி மதிப்பில் கொரட்டூர் –

# கொத்தனூர் இடையே தார்ச்சாலை அமைக்கும் பணி!

## மணிக்கண்ணன் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்!

உளுந்தூர்பேட்டை, அக். 4-

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை சட்டமன்றத் தொகுதியில் கொரட்டூர் - கொத்தனூர் கிராமத்துக்குச் செல்லும் விதமாக ரூ.1.65 கோடி மதிப்பீட்டில் தார்ச் சாலை அமைக்கும் பணியை வடக்கு மாவட்டக் கழக அவைத் தலைவர், தமிழ்நாடு கால்நடை ஆட்சி மன்றக்குழு உறுப்பினர் ஆ.ஜெ.மணிக்கண்ணன் எம்.எல்.ஏ. தலைமை தாங்கி சாலை அமைக்கும் பணியினை தொடங்கி வைத்தார்.

இதில் மாவட்டக் கழகக் கவுன்சிலர் ப்ரியா பாண்டியன், ஊராட்சி மன்றத்தலைவர் நாகராஜ், ஒன்றியக் கழகக் கவுன்சிலர் மாலதி, முன்னாள் மாவட்டக் கவுன்சிலர் பத்மநாபன், பாதூர் வேல் முருகன், தகவல் தொழில் நுட்ப அணி தொகுதி ஒருங்கிணைப்பாளர் கிளாபாளையம் மணிகண்டன், கொத்தனூர் திருமால், கூவாகம் ராஜி, பெரியபட்டு சசி, ஊராட்சி செயலாளர், கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் தமிழ்நாட்டின் துணை முதலமைச்சராக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பதவியேற்று கொண்டார். அதனை தொடர்ந்து சேலம் இரா.ராஜேந்திரன் அமைச்சராகவும் பதவி ஏற்றுக் கொண்டதையொட்டி சேலம் கிழக்கு மாவட்டம் தலைவாசல் மத்திய ஒன்றியச் செயலாளர் சாத்தப்பாடி மணி தலைமையில் பட்டாசு வெடித்து இனிப்புகள் வழங்கினார். இதில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செ.குணசேகரன், மாவட்டப் பிரதிநிதிகள் மு.தேவேந்திரன், பாஸ்கரன், காசிலிங்கம், ஒன்றிய அவைத்தலைவர் பிச்சமுத்து, மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர் கண்ணுசாமி, மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் கருப்பையா, சி.பழனியாண்டி, கிளைக் கழகச் செயலாளர் குணசேகரன், தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் பி.ராம்குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

---

### அண்ணாமலை பல்கலைக் கழகத்தில்

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா!

## அமைச்சர் க.பொன்முடி தலைமையில் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் முன்னிலையில் நடைபெற்றது!

சிதம்பரம், அக். 4 –

கடலூர் மாவட்டம், சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி தலைமையில் வேளாண்மை– உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர். கே.பன்னீர்செல்வம், மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் ஆகியோர் முன்னிலையில் 30.09.2024 அன்று நடைபெற்றது.

தமிழ்நாடு அரசு முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவின் சார்பாக மாணவர்களுக்கான பேச்சுப் போட்டியினை மாவட்டந்தோறும் கல்லூரி அளவில், பல்கலைக்கழக அளவில் மற்றும் மாநில அளவில் நடத்தப்பட்டு வருகிறது.

கடலூரில், அண்ணா மலைப் பல்கலைக்கழக இணைப்புக் கல்லூரிகள் அனைத்திலும் முதற்கட்டமாகப் பேச்சுப்போட்டி நிகழ்த்த பெற்றது. இந்த நிகழ்ச்சியில் முதலாவதாக வெற்றிபெற்ற மாணவர்களுக்கு மீண்டும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பேச்சுப்போட்டி நடத்த பெற்றது.

அப்போட்டியில் தமிழ்நாடு அரசு சார்பாக முதலிடம் பெற்றவருக்கு ரூ.10,000 தொகையும், இரண்டாவதிடம் பெற்ற வருக்கு ரூ.6,000 தொகையும், மூன்றாவதிடம் பெற்ற வருக்கு ரூ.4,000/– பரிசுத் தொகையும் வழங்கப்பெற்றது.

தமிழ்நாடு அரசு முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவின் சார்பாக அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ரூ.5,00,000/– மதிப்பீட்டில் மாணவர்களுக்காக முத்தமிழறிஞர் கலைஞர் தமிழ் மன்றம் அமைக்க பெற்றது.

இம்மன்றத்தின் சார்பாகப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு மட்டும் பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, கவிதைப்போட்டி நடத்தப்பெற்று, ஒவ்வொரு போட்டியிலும் வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசுத் தொகையும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பெற்றது.

அமைச்சர் பெருமக்கள் தெரிவித்ததாவது :–

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, பல்வேறு சிறப்பு திட்டங்கள், நிகழ்ச்சிகள் தமிழ்நாடு முழுவதும் நடத்தப்பட்டு வருகிறது.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சி காலத்தில் நிறைவேற்றிய சட்டங்களும், திட்டங்களும் அடித்தட்டு மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில் அமைந்துள்ளது. இந்தியாவில் உள்ள பல மாநிலங்களோடு ஒப்பிடுகை யில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. இதற்கு முக்கிய காரணம் கலைஞர் அவர்கள் நிறைவேற்றிய வளர்ச்சி திட்டங்களே ஆகும்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எழுதிய பல புத்தகங்களை மேற்கோள் காட்டி அதனடிப்படையில் மாணவர்கள் திகழ வேண்டும் எனவும், மேலும் சான்றோர்க்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு என்ற வாக்கிற்கிணங்க கல்வி மட்டுமே தனிமனித வாழ்க்கையை மேம்படுத்தும். அதற்காக அரசு வழங்கும் சலுகைகளை பயன்படுத்தி மென்மேலும் உயர வேண்டுமென அமைச்சர் பெருமக்கள் அவர்கள் கூறினர்.

அவ்வகையில் பெரியார், அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வழியில் தற்போதைய முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின்; நலன் கருதி அவர்கள் வாழ்வில் முன்னேற்றமடையும் வகையில் பல்வேறு சீரிய திட்டங்களை அறிவித்து செம்மையாக செயல்படுத்தி வருகிறார்கள். பல்வேறு துறைகளின் மூலம் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று தீர்வு காணும் வகையில் மக்களுடன் முதல்வர் திட்டம், மக்களைத் தேடி மருத்துவம் திட்டம், அரசு பள்ளியில் பயிலும் தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு வழங்கிடும் வகையில் முதலமைச்சரின் காலை உணவு திட்டம், மக்களை நாடி மக்கள் குறைகளை கேட்டு உடனுக்குடன் தீர்வு காண அரசு இயந்திரம் களத்திற்கே வரும் உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்டம், பேருந்துகளில் மகளிருக்கு இலவச பயணம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் மூலம் ஏழை எளிய மக்கள் பயனடைந்து வருகின்றனர்.

அதுமட்டுமின்றி குடும்பத்திற்காக அயராது உழைத்துக் கொண்டிருக்கும் பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி, வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, சமூகத்தில் சுயமரியாதையோடு வாழ்வதற்கு வழிவகுக்க வேண்டும் என்ற சீரிய நோக்கத்திற்காக குடும்ப தலைவிகளுக்கு மாதம் ரூ.1,000 உரிமைத் தொகையாக வழங்கிட முதலமைச்சர் அவர்களின் முன்னோடி திட்டமாக ‘கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

மேலும், அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி களில் தமிழ் வழியில் 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை பயின்ற ஏழை எளிய மாணவிகளை சாதனையாளர்களாக உருவாக்கிடவும் அரசுப் பள்ளி மாணவிகள் உயர்கல்வி சேர்க்கையை உயர்த்திடவும் ‘புதுமைப் பெண்’ திட்டம், மேலும், மாணவர்களின் உயர்கல்வி சேர்க்கையை உயர்த்திடும் வகையில் ‘தமிழ்ப் புதல்வன்’ திட்டம், ‘கலைஞர் மகளிர் உரிமைத் தொகை’ திட்டத்தில் பயன்பெறும் மகளிர்கள் அத்தொகையை கூட்டுறவு வங்கியில் சிறப்பு தொடர் வைப்பு செய்யும் பட்சத்தில் அவர்களுக்கு 8 சதவிகித வட்டி வழங்கும் ‘தமிழ் மகள்’ திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள் என தெரிவித்தனர்.

இந்நிகழ்ச்சியில் சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினர் தொல். திருமாவளவன், விழுப்புரம் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிக்குமார், காட்டுமன்னார்கோயில் சட்டமன்ற உறுப்பினர் ம.சிந்தனைச்செல் வன், அண்ணாமலைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முது முனைவர். இராம.கதிரேசன், அண்ணாமலைப் பல்கலைக் கழக பதிவாளர் (பொ.) இரா.சிங்காரவேல் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



அக்டோபர் 2 காந்தி ஜெயந்தியை முன்னிட்டு புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மங்கலத்துப் பட்டி ஊராட்சி ஏ.டி. காலனி மற்றும் மணவிடுதி ஊராட்சி எம்.குலவாய்ப்பட்டி ஆகிய ஊராட்சிகளில் நடைபெற்ற கிராமசபை கூட்டத்தில் கலந்துகொண்டு, கழக அரசின் மூன்றாண்டு கால சாதனையை பொதுமக்களிடம் உரையாற்றி பொதுமக்களின் கோரிக்கைகளை கேட்டறிந்து தீர்மானமாக நிறைவேற்றப்பட்ட கோரிக்கைகளை துறை சார்ந்த அதிகாரிகளிடம் உடனடியாக நிறைவேற்ற புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா வலியுறுத்தினார். இந்நிகழ்வில் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ஜெயலட்சுமி தமிழ்ச்செல்வன், ஊராட்சி மன்றத் தலைவர்கள் சத்யா சக்திவேல், நல்லகண்ணு, துணைத் தலைவர் துரை, கழக நிர்வாகிகள் தில்லையப்பன், சீனி உள்ளிட்ட கழக உள்ளாட்சி அமைப்பினர், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வாலாஜாபாத் தி.கிருஷ்ணராஜ்
### அக்டோபர் 4 (2014)



**வாலாஜாபாத் ஒன்றியக் கழக பொறுப்பாளராக 1988 முதல் 1992 வரை நான்கு ஆண்டுகள் அதன்பின்னர் 1992 முதல் 2008ம் ஆண்டுவரை ஒன்றிய செயலாளராக தொடர்ந்து பணியாற்றியவர்.**

**தொடர்ந்து 20 ஆண்டு காலம் வாலாஜாபாத் ஒன்றிய கழக வளர்ச்சிக்குப் பாடுபட்டவர்.**

**கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**